Revised

செ.வெ.எண் : 292 நாள் : 24.05.2011

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் விரைவாகவும், செம்மையாகவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், பதவியேற்ற அன்றே ஏழு முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அதற்குரிய கோப்புகளில் கையெழுத்திட்டார்கள். அந்த ஏழு திட்டங்களில், மீன்பிடி தடை காலத்தில் விசைப் படகுகள், இழுவலைப் படகுகள் மூலம் மீன்பிடிக்கும் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவித்தொகையை உயர்த்தி வழங்கும் திட்டமும் ஒன்றாகும்.

தமிழக கடல் பகுதியில் மீன்வளத்தை பாதுகாத்திட வேண்டி ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 15 முதல் மே மாதம் 29 வரையிலும், மேற்கு கடற்பகுதியில் ஜூன் மாதம் 15 முதல் ஜூலை மாதம் 29 வரையிலும் 45 நாட்களுக்கு விசைப் படகுகள், இழுவலைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பது தடை விதிக்கப்படுகிறது. இவ்வாறு மீன்பிடிப்பு தடை செய்யப்படும் காலத்தில் மீன்பிடி படகுகளில் பணிபுரியும் மீனவர்கள் மற்றும் மீனவத் தொழிலாளர்கள் வருமானம் ஈட்ட வழிவகையில்லாமல் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படுவதால் அவர்களின் துயரினைத் துடைக்கும் பொருட்டு, மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலத்தில் வழங்கப்படும் நிவாரண உதவித் தொகையை உயர்த்தி வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். அதன்படி, மீன்பிடி தடைக் காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்த்தி வழங்க உடனடியாக அரசாணை வெளியிடப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (24.05.2011) தலைமைச் செயலகத்தில், மீன்பிடி தடை காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித் தொகையை உயர்த்தி வழங்கும் திட்டத்தை, தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 13 பயனாளிகளுக்கு தலா 2000 ரூபாய் வழங்கி தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் உள்ள 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1.60 இலட்சம் மீனவக் குடும்பங்கள் பயனடையும் வகையில் 32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ. ஜெயபால் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு. தேபேந்திரநாத் சாரங்கி மற்றும் கால்நடை, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9
நாள்: 24.5.2011